# சமூக வலைத்தளங்கள் தொடர்பான பிரகடனம்

## கொழும்பு | 2019

சமூக வலைத்தளங்களைப் பொறுப்புமிக்க விதத்தில் பயன்படுத்துவதற்கான ஒழுக்க நெறிக்கோவை

COLOMBO I 2019

**social media declaration**

#EngageSMinSL

# பின்னணி

சமூக வலைத்தளங்கள் என்பவை இணையத்தை அடிப்படையாக் கொண்ட பல்வேறு செயலிகள் (Apps), இணையத்தளங்கள் மற்றும் கணினி முறைகள் (Platforms) என்பவற்றை உள்ளடக்குகின்றன. அவை பாவனையாளர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதற்கும், விடயங்களை உருவாக்கி, சமர்ப்பித்து, பரப்புரை செய்வதற்கும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கின்றது. மேலும் ஏனையவற்றுடன் உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய ரீதியிலான பார்வையாளர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய ஆற்றலையும் சமூக வலைத்தளங்கள் வழங்குகின்றன. சமூக வலைத்தளங்கள் பூகோள எல்லைகளின் வரையறைகளை கொண்டிருக்கவில்லை. பாவனையாளர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது நாடு அல்லது தமது அரசியல் பின்புலம் என்பன தமக்கு வழங்கக் கூடிய கருத்துச் சுதந்திரத்திற்கும் அப்பால் சென்று கருத்து சுதந்திரத்தை அனுபவிக்கக் கூடியவர்களாக அல்லது உருவாக்கிக்கொள்பவர்களாக இருந்து வருகின்றார்கள். நினையாப் பிரகாரமும், வடிவமைப்பின் மூலமும் வழங்கப்பட்டிருக்கும் இந்த திறந்த தன்மை நேர்மறையானதாகவும், அதேபோல எதிர்மறையானதாகவும் இருந்து வருகின்றது. ஒரு சில பாவனையாளர்கள் மற்றவர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் மற்றும் சாராம்சம் என்பவற்றுக்கு தமது கருத்துக்களை பொறுப்புடனும் கௌரவத்துடனும் வெளிப்படுத்துகின்றார்கள். மற்றவர்கள் அவ்விதம் செய்வதில்லை.

ஒவ்வொரு பாவனையாளரும் பல்வேறு வீச்சிலான ஊடகங்களைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் முனைப்பான விதத்தில் உரையாடல்களில் ஈடுபடுவதற்கும், சமூகத் தொடர்புகளில் ஈடுபடுவதற்கும் சமூக வலைத்தளங்கள் வாய்ப்பினை வழங்குகின்றன. அறிவுப் பரிமாற்றம், விமர்சனபூர்வமான உரையாடல்களின் உருவாக்கம், அதிகாரபூர்வமான மனப்பாங்குகள் தொடர்பாக கேள்வி எழுப்புதல் மற்றும் மாற்றுக் கலைந்துரையாடல்களை கட்டியெழுப்புதல் ஆகிய அனைத்தும் சமூக வலைத்தளங்கள் ஊடாக சாத்தியமானவையாக இருந்து வருகின்றன. மேலும், அவை கூட்டுச்செயற்பாடுகளுக்கும், மக்களை அணிதிரட்டுவதற்கும் வாய்ப்பினை வழங்குவதுடன், மிகவும் நிர்ணயகரமான சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன குறித்த தனிப்பட்ட நபர்களின் அபிப்பிராயங்களை முன்வைப்பதற்கான வாய்ப்பினை வழங்குகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இத்தகைய தொடர்பாடல்கள் மூலம் பூகோள, அரசியல் மற்றும் ஏனைய பௌதீக எல்லைகள் தகர்த்தெறியப்படுகின்றன. பல்வேறு பிராந்தியங்களை, வேறுபட்ட நேர வலயங்களை மற்றும் நாடுகளைச் சேர்ந்தவர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் இடைநடுவர்கள் ஆகியோர் அனைவருக்குமான வெளிகளில் இடையறாது மற்றையவர்களின் கருத்துக்களை ஆதரித்து வருகின்றார்கள் அல்லது எதிர்கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்கள்.

அதேவேளையில், சமூக வலைத்தளங்களில் பிரசுரிக்கப்படும் அல்லது பரப்பப்படும் விடயங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பொதுமக்களின் நலனுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய விதத்திலான சமூக – அரசியல் பிரிவினைகளை உருவாக்குகின்றன் அல்லது அவற்றை தீவிரப்படுத்துகின்றன. மேலும், அவை நீண்டகால ரீதியில் மிகவும் அடக்குமுறை சார்ந்த, பிற்போக்கு இயல்பிலான மற்றும் நெறிமுறை பிறழ்ந்த ஒரு சமூகம் தோன்றுவதற்கும் பங்களிப்புச் செய்கின்றன. இலங்கையிலும் கூட பாலினம், தேசிய இனம், சமயம், சாதி அல்லது பாலீர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் வெறுப்பு மற்றும் வன்முறை என்பவற்றை தூண்டக்கூடிய கணிசமான அளவிலான விடயங்கள் சமூக வலைத்தளங்களில் காணப்படுவது எம்மைப் பொறுத்தவரையில் கரிசனைக்குரிய ஒரு விடயமாக இருந்து வருகின்றது. தமது குறுகிய நோக்கங்களுக்காக சமூக வலைத்தளங்களை துஷ்பிரயோகம் செய்வதில் திறமையானவர்களாக இருந்துவரும் ஒரு சில நபர்களும், செயற்பாட்டாளர்களும் ஏனைய முக்கியமான குரல்கள் மற்றும் எதிர்க்குரல்கள் என்பவற்றை விளிம்பு நிலைக்குத் தள்ளி வருகின்றார்கள். சமூக வலைத்தளங்களின் தீங்கு விளைவிக்கக்கூடிய தாக்கம் மற்றும் துஷ்பிரயோகம் என்பன அதி நவீன அரசியல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சாரச் செயற்பாடுகள், தரவுகளை திருடுதல், பொய்யான தகவல்களைப் பரப்புதல் மற்றும் மற்றவர்களின் அடையாளங்களை திருடுதல் என்பவற்றை உள்ளடக்கியிருப்பதாக உலகளாவிய அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

அரசாங்கங்களும், சமூக வலைத்தள கம்பனிகளை உள்ளடக்கிய விதத்திலான ஏனைய நிறுவனங்களும் சமூக வலைத்தளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் விடயத்தை கட்டுப்படுத்துவதற்கென தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இதுவும் கூட ஆபத்துக்களைக் கொண்ட ஒரு செயற்பாடாக இருந்து வருகின்றது. ஏனெனில், எதேச்சாதிகார அரசாங்கங்கள் தமது சொந்த டிஜிட்டல் பரப்புரை செயற்பாடுகளை உருவாக்குவதற்கு அல்லது இறுதியில் எதிர்ப்புக் குரல்களை மௌனிக்கச் செய்வதனை நோக்கமாகக் கொண்ட சட்டவாக்கங்களை அறிமுகம் செய்து வைப்பதற்கு பிழையான தகவல்கள் குறித்த அச்சுறுத்தலைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

இந்தப் பிரகடனம், சமூக வலைத்தளங்கள் தொடர்பான கருத்துச் சுதந்திரத்தின் அல்லது சமூக வலைத்தளங்களின் கருத்துச் சுதந்திரத்தின் புனிதமான முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்கான ஒரு முயற்சியாக இருந்து வருகின்றது. ஆனால், அதே வேளையில் சமூக வலைத்தளங்களை தார்மீகநெறிகளுடன் கூடிய விதத்தில், முற்போக்கான முறையில், ஜனநாயக ரீதியில் சமூகத்துக்கு சார்பான விதத்தில் பயன்படுத்தும் நிலையை ஊக்குவிப்பதற்கும், பலப்படுத்துவதற்கும் அது முயற்சிக்கின்றது.

## குறிக்கோள்

பொறுப்புணர்வுடன் கூடிய விதத்தில் சமூக வலைத்தளங்களின் பாவனையை ஊக்குவித்தல் மற்றும் டிஜிட்டல் தகவல்துறை தொடர்பான அறிவினை பலப்படுத்துதல், டிஜிட்டல் உரிமைகள் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாசார ரீதியிலான மனித உரிமைகளுடன் இயற்கையாகவே இணைந்திருப்பதுடன், பிரித்து வேறுபடுத்த முடியாத அளவுக்கு பின்னிப் பிணைந்துள்ளன என்ற விடயத்தையும், அந்த உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கு அத்தியாவசியமானதாக இருந்து வருகின்றது என்ற விடயத்தையும் அங்கீகரித்தல்.

## யார்?

கீழே கையொப்பமிட்டிருப்பவர்கள் பரஸ்பரம் உடன்பட்டிருக்கும் இந்த உடன்பாட்டை தம்மால் முடிந்தவரையில் ஏனையவர்களிடமும், அனைத்து சமூக வலைத்தள ஊடகத் தளங்களிலும், டிஜிட்டல் வெளிகளிலும், அதேபோல டிஜிட்டல் அல்லாத வெளிகளிலும், மையநீரோட்ட அச்சு, ஒலிபரப்பு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலும் ஆதரவளித்து, ஊக்குவிப்பார்கள்.

## ஏன்?

- இணையத்தின் மூலமான கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை உள்ளடக்கிய மனித உரிமைகளைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சட்டரீதியாக அல்லது ஏனைய வழிமுறைகளில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கான ஒரு மாற்று வழியாக இது முன்வைக்கப்படுகின்றது.

- அக்கறை கொண்டிருக்கும் பயனாளர்கள் சமூக வலைத்தள பிரிவுகள் அனைத்திலும் ஆரோக்கியமான உரையாடல் தளமொன்றை மேம்படுத்தி, பாதுகாத்துக் கொள்வதற்கும், கருத்துக்கள் தொடர்பான வலுவான விவாதத்தை ஊக்குவிப்பதற்கும், அதே வேளையில் தனது சொந்த கருத்திலிருந்து வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கும் ஆட்கள் தொடர்பாக ஒரு மரியாதையைப் பேணி வருவதற்கும் உதவக் கூடிய ஒரு மேடையாக செயற்படுதல்.

- தார்மீக ரீதியிலும், பொறுப்புவாய்ந்த விதத்திலும் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வைத் தூண்டும் ஒரு கருவியாக இருந்து வருதல்.

# நடத்தை நெறிக்கோவை

**நாங்கள் எமது உச்சமட்ட ஆற்றலைப் பயன்படுத்தி, அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாங்கள் ஒரு பாகமாக இருந்துவரும் அல்லது தொடர்பு கொண்டுவரும் அனைத்து சமூக வலைத்தளங்கள் மற்றும் வலைமனைகள் (Domains) என்பன நெடுகிலும் பின்வரும் விடயங்களின் உருவாக்கம், பரவல் மற்றும் நிரந்தரமாக நிறுத்திவைப்பதை ஏற்றுக்கொண்டு செயற்படுவோம்.**

- இனம், மதம் அல்லது சாதி என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டுதல்.
- பெண்களுக்கு எதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் ஏனைய வன்முறை (பாலின அடிப்படையில் புறமொதுக்குதல், பாலியல் தொந்தரவு, பெண் இன வெறுப்பு, ஆபாச புகைப்படங்கள் மற்றும் வீடியோ என்பவற்றைப் பயன்படுத்தி பழிவாங்குதல் உள்ளடக்கிய விதத்தில்)
- பாலியல் துஷ்பிரயோகம்
- பாலியல் ஈர்ப்பு அல்லது பாலின அடையாளம் என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டுதல்
- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் கடத்தல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் சிறுவர் உரிமைகளை மீறுதல் மற்றும் சிறுவர்களைச் சுரண்டுதல்.
- வெறுப்பு, வன்முறை என்பவற்றை தூண்டக்கூடிய விடயங்களை வெளியிடுதல், அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல், இணையத்துக்கூடாக ஆட்களைத் துன்புறுத்துதல் மற்றும் அபாயகரமான பேச்சுகள்
- விளிம்பு நிலைச் (ஒடுக்கப்பட்ட மக்கள்) சமூகங்களை துன்புறுத்துதல்
- சட்ட விரோதமான செயல்கள்
- தரவுகளைத் திருடுதல் மற்றும் தகவல் மூலாதாரங்கள் மற்றும் ஊடகங்கள் என்பவற்றை தார்மீக நெறிமுறைகளுக்கு மாறான விதத்தில் துஷ்பிரயோகம் செய்தல் (அனுமதியில்லாமல் புகைப்படங்களை பயன்படுத்துதல் போன்ற விடயங்கள்)
- பொய்யான தகவல்களை வழங்குதல், தவறான தகவல்கள் மற்றும் வேண்டுமென்றே தகவல்களை திரித்துக்கூறுதல்
- பொறுப்பற்ற ஆபாச காட்சிகள்

**கீழே கையொப்பமிட்டிருக்கும் நாங்கள் மனித உரிமையை அடிப்படையாகக் கொண்ட பொறுப்புடன் கூடிய, தார்மீக ரீதியான மற்றும் ஜனநாயக ரீதியான சமூக வலைத்தளங்களின் பாவனையை விருத்தி செய்யும் பொருட்டு பின்வரும் விடயங்களை ஆதரித்து, ஊக்குவிப்போம்:**

- தகவல் அறியும் உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பவற்றைப் பாதுகாத்து, பேணி வருதல்.
- டிஜிட்டல் உரிமைகளை மனித உரிமைகளாக அங்கீகரித்தல்.
- விளிம்பு நிலை பிரஜைகளுக்கு தமது குரல்களை எழுப்புவதற்கு வாய்ப்பளிக்கும் சமூக வலைத்தள வெளிகளைப் பேணிப் பாதுகாத்தல்.
- துல்லியமான, உண்மையான தகவல்கள் பரப்பப்படுவதனை மேம்படுத்தி, பலப்படுத்தல்.
- ஊடக மற்றும் தகவல் அறிவினை மேம்படுத்துதல்.
- சமூக வலைத்தள ஊடகங்களை விளிம்பு நிலை மற்றும் இடர்களை எதிர்கொண்டிருக்கும் சமூகங்களுக்கான பாதுகாப்பான, வரவேற்புடன் கூடிய ஒரு வெளியாக ஆக்குதல். குறிப்பாக பெண் இன வெறுப்பு, பெண்களை சிறுமைப்படுத்தல் மற்றும் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறை அச்சுறுத்தல்கள் என்பவற்றுடன் கூடிய போக்குகளை கவனத்தில் எடுத்தல்.
- அந்தரங்கத்துக்கான உரிமைக்கு மதிப்பளித்தல்.

## சமூக வலைத்தளங்களின் பொறுப்புக்கள்

- (சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு) உள்ளூர் மொழிகளிலும் விடயங்களை முன்வைப்பதற்கான மொழி ஆற்றலை அதிகரித்தல்.

- இலங்கையில் இணையத்தில் பயனர்களால் உருவாக்கி, வெளியிடப்படும் அறிக்கைகளை உரிய விதத்தில் செம்மைப்படுத்தும் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருக்கும் நபர்களின் எண்ணிக்கை, அவர்களுடைய பால்நிலை, மொழித்திறன் மற்றும் அவர்கள் நிலைகொண்டிருக்கும் நேர வலயம் என்பன தொடர்பான தகவல்களை வெளிப்படையாக வழங்குதல்.

- இலங்கையிலிருந்து இணையத்தில் வெளியிடப்படும் விடயங்கள் தொடர்பாக பாவனையாளர்கள் முன்வைக்கும் முறைப்பாடுகளை கவனத்தில் எடுத்து, திட்டவட்டமான ஒரு காலப்பிரிவுக்குள் அவற்றை தீர்த்து வைப்பதற்கென தெளிவான கடப்பாடுகளை கொண்டிருத்தல், வன்முறை தீவிரமடைந்திருக்கும் நிலையில் இதற்கென எடுத்துக் கொள்ளப்படும் கால அவகாசம் மேலும் குறைக்கப்படுதல் வேண்டும்.

- வெறுப்பு மற்றும் வன்முறை என்பவற்றை தூண்டும் விடயங்கள் மற்றும் பிழையான தகவல்கள் என்பவற்றை நீக்கும் பொருட்டு சமூக வலைத்தளங்களால் பிரயோகிக்கப்பட்டு வரும் சோதனை முறைகளைப் பகிரங்கப்படுத்துதல்.

- அமுல் செய்யப்படும் எத்தகைய தீர்வுகளும் நிலையானவையாகவும், அளவிடக்கூடியவையாகவும், எதிர்வினையாற்றக் கூடியவையாகவும் இருந்து வருவதனையும், ஏனைய பிராந்தியங்களில் மீண்டும் பயன்படுத்தக்கூடியதாக இருந்து வருவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.

- எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய மற்றும் பகிரங்கமாக கிடைக்கக் கூடிய அனைத்து மொழிகளிலும் எடுத்து விளக்கப்படும் கொள்கைகளுக்கு ஊடாக பாவனையாளர்களின் அந்தரங்கம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை எடுத்துவருவதற்கான கடப்பாடுகளை மேற்கொள்ளல்.

- தொழில்நுட்ப கம்பனிகள், ஏனைய கம்பனிகள், அரசாங்கங்கள், கல்விமான்கள் மற்றும் அக்கறை கொண்டிருக்கும் தரப்பினர் ஆகியோருடன் கூட்டாக இணைந்து தொழில்முறையிலான, பரவலாக பிரயோகிக்கத்தக்க ஒழுக்கநெறிக்கோவையொன்று அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். சமூக வலைத்தளங்களில் பாவனையாளர்கள் எதனைச் செய்ய முடியும், எதனைச் செய்ய முடியாது என்பதனை எழுத்து மூலம் எடுத்து விளக்குதல் அவசியமாகும்.

- புதிய ஆக்கங்கள், குறித்த நோக்கத்துக்கு பொருத்தமானவை என்பதனையும், பாவனையாளர்களுக்கு அல்லது சமுதாயத்துக்கு அபாயங்களை உருவாக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கென பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும்.

## அரசாங்கத்தின் பொறுப்புகள்

- குறிப்பாக கருத்து வெளியீட்டு சுதந்திரத்தையும் உள்ளடக்கிய விதத்தில் மனித உரிமைகளை மேம்படுத்தி, பாதுகாக்கும் சூழ்நிலை ஒன்றை உருவாக்குதல்.

- 2017.11.23ஆம் திகதி புதுடில்லியில் இடம்பெற்ற சைபர்வெளி தொடர்பான உலகளாவிய மாநாட்டின் போது இணையத்தின் நடுநிலை தொடர்பாக பிரதமரால் முன்வைக்கப்பட்ட கடப்பாட்டுக்கு மதிப்பளித்தல், “இணையத்தை நியாயமான, அனைவருக்கும் சமமான ஒரு களமாக பராமரித்து வருதல்” மற்றும் இணையம் மூடப்படும் நிலை அல்லது மெதுவாக இயங்கும் நிலை என்பவற்றிலிருந்து தவிர்த்து கொள்ளல்.

- வெறுப்பு மற்றும் வன்முறை அல்லது பொய்யான தகவல்கள், பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தல் மற்றும் இணையத்தின் ஊடாக பாரபட்சம் காட்டுதல் என்பவற்றுக்கு எதிராகப் போராடும் விடயத்தில் தற்போதைய உள்நாட்டு சட்ட ஏற்பாடுகள் என்பவற்றையும், இலங்கை கையொப்பமிட்டிருக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் (ICCPR) போன்ற சர்வதேச ஒப்பந்தங்களையும் அமுல் செய்தல்.

- தனிநபர் பாவனையாளர் அந்தரங்கம் மற்றும் தரவுகள் தொடர்பான திட்டவட்டமான அனைத்துமடங்கிய சட்டவாக்கத்தை உருவாக்குதல்.

- கருத்துச் சுதந்திரம் தொடர்பான சர்வதேச தரநியமங்களுக்கு இணங்கி ஒழுகுவதற்கு தேவையான சட்ட சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துதல்.

- இணையத்துக்கு ஊடாக தவறான தகவல்கள் மற்றும் வேண்டுமென்றே திரிக்கப்பட்ட தகவல்கள் பரப்பப்படும் விதம் குறித்த ஆராய்ச்சிகளுக்கு ஆதரவளித்தல், தேசிய கல்வி பாடத்திட்டத்துக்குள் டிஜிட்டல் அறிவினை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- சமூக வலைத்தள ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களையும் உள்ளடக்கிய விதத்தில் இணையத்துக்கு ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து அரசியல் பிரச்சாரங்களும் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்ற விடயம் தெளிவாக சுட்டிக்காட்டப்படுவதனை உறுதிப்படுத்தல், இணையத்துக்கு ஊடாக மேற்கொள்ள ப்படும் பிரச்சாரங்கள் மற்றும் செய்திகள் என்பவற்றை பௌதீக ரீதியாக பிரசுரிக்கப்படும் துண்டுப்பிரசுரங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் விளம்பரங்கள் என்பவற்றுக்கு இணையான விதத்தில் கையாளல்.

- ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றம் கொண்டிருப்பதை போல வெறுப்பு, வன்முறை மற்றும் திரிக்கப்பட்ட தகவல்கள் என்பவற்றை தூண்டும் விடயங்களை பரப்பும் செயற்பாட் டின் போது சமூக வலைத்தளங்கள் அதிக அளவில் பொறுப்புக்கூற வேண்டிய நிலையை அங்கீகரித்தல்.

- அனைவரும் இணையத்தை அணுகக்கூடிய ஒரு நிலைமையை எடுத்து வருவதற்கு செயற்படுதல், நாட்டின் பல பிரதேசங்கள் இணையத்தை அணுகும் வசதிகளை கொண்டிருக்கவில்லை என்ற விடயத்தை அங்கீகரித்தல் GOOGLE LOON போன்ற கருத்திட்டங்களுக்கு அனுசரணை வழங்குவதன் மூலம் இதனை மேற்கொள்ள வேண்டும்.

- வெறுப்பைத் தூண்டும் பிரச்சாரங்களை முறியடிக்கும் பொருட்டு எதிர் செய்திகளை அனுப்பிவைக்கும் பிரச்சார செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தல்.

## ஊடக நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகிய தரப்புக்களின் பொறுப்புக்கள்

- ஆபத்து நிலையில் இருந்து வரும் சமூகத்தினர் மற்றும் விளிம்பு நிலை சமூகத்தினர் ஆகியோரின் உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்துவதற்கென (டிஜிட்டல் தளங்களையும் உள்ளடக்கிய விதத்தில்) ஆரோக்கியமான, சாதகமான சூழ்நிலை ஒன்று உருவாக்கப்படுவனை ஊக்குவித்தல்.

- சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுக்களின் ஆதரவுடன் கூடிய விதத்தில் ஊடகங்கள் மற்றும் தகவல் தொடர்பான அறிவு மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு என்பன தொடர்பாக நீண்ட கால ரீதியில் பொதுமக்களின் விழிப்புணர்வைத் தூண்டுவதற்கு ஆதரவளித்தல் மற்றும் அதற்கான பரப்புரை செயற்பாட்டாளர்களாக செயற்படுதல். அது தற்போதைய சட்ட வாக்கத்தின் பின்னணியில் பாவனையாளர்களுக்கு தமது டிஜிட்டல் உரிமை குறித்த கல்வியை வழங்கும்.

- தேசிய பாடத்திட்டத்தில் டிஜிட்டல் அறிவையும் உள்ளடக்குமாறு அரசாங்கத்திடம் பரப்புரை செய்தல்.

- சமூக வலைத்தளங்களில் பிரசுரிக்கப்படும் பொய்யான தகவல்கள், பிழையான தகவல்கள் மற்றும் தவறான தகவல்கள் என்பனவற்றை அம்பலப்படுத்துதல் மற்றும் திருத்துதல்.

- மையநீரோட்ட ஊடகங்களில் இணையதளங்கள் மற்றும் சமூக வலைத்தள கணக்குகள் என்பன தொடர்பாக கருத்துக்களை நெறிப்படுத்துதல் மற்றும் உள்ளடக்கங்களை கட்டுப்படுத்துதல் தொடர்பான கொள்கைகளை அறிமுகம் செய்து வைத்தல். அவை வெறுப்பைத் தூண்டும் பிரச்சாரங்களை முனைப்பான விதத்தில் எதிர்த்து நின்று, முறியடிக்கக் கூடியதாக இருந்து வருவதுடன், கட்டுரைகள், நிரல்கள் மற்றும் ஒலிபரப்புக்கள் என்பவற்றிலிருந்து மானபங்கத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது வெறுப்பைத் தூண்டக்கூடிய விடயங்களை அகற்றுவதற்கு உதவும் ஆசிரியத்துவ கொள்கைகளுக்கு இணையான விதத்தில் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

- வெறுப்பைத் தூண்டும் பிரச்சாரங்களை முறியடிப்பதற்கென அரசாங்கத்தின் ஆதரவுடன் எதிர்ச்செய்தி பிரச்சாரங்களை உருவாக்குதல் மற்றும் இணையத்துக்கு ஊடாக மரியாதைக்குரிய மற்றும் மனித உரிமையை அடிப்படையாகக் கொண்ட தார்மீக நெறிமுறைகளுடன் கூடிய உரைகளுக்கென பரப்புரை செய்தல். மியன்மாரின் "Flower Speech" போன்ற இயக்கங்கள் இதற்கு உதாரணமாகும்.

COLOMBO I 2019 social media declaration #EngageSMinSL

**கையொப்பம்:**

Centre for Policy Alternatives | Eastern Province Journalist Forum | Groundviews.org | Hashtag Generation | Internet Media Action | Jaffna Press Club | Lanka News Web | Law and Society Trust | Maatram.org | Movement for Land and Agricultural Reform | Nelum Yaya Foundation | Outbound Today | PEaCE ECPAT Sri Lanka | Rights Now Collective for Democracy | Sarvodaya Shramadana Movement | Sri Lanka Muslim Media Forum | Srilanka Working Journalists' Association | Transparency International Sri Lanka | Vikalpa.org

COLOMBO I 2019

social media declaration

#EngageSMinSL

# "Hardwired for Life: Human Rights Online and Offline"

10 YEARS IN 2017

විකල්ප

journalism for citizens

#EngageSMinSL

vikalpa.org | socialmedialanka.org | @vikalpavoices | facebook.com/Vikalpasrilanka | editor@vikalpa.org | sampath@cpalanka.org | +94 11 2081384